# திராவிடன்.

# THE DRAVIDAN.

**A Monthly Newspaper.**

"சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி."

### சந்தா விளம்பரம்.

| | | |
|---|---|---|
| தபாற்செலவின்றி வருஷம் ஒன்றுக்கு | ரூ. | 1-00 |
| தபாற்செலவு உட்பட | ,, | ரூ. 1 25 |
| மலாய்நாட்டிற்கு | ,, | ரூ. 2-50 |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்
தனிப்பிரதி 10 சதம்.
முற்பணமாகவே அனுப்பவேண்டியது.

### விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| 1 கலம் முதன்முறை | ரூ. 4 50 |
| $\frac{3}{4}$ ,, ,, | ரூ. 3. 00 |
| $\frac{1}{2}$ ,, ,, | ரூ. 2 50 |
| $\frac{1}{4}$ ,, ,, | ரூ. 1 50 |

அடுத்தமுறைகளில் $\frac{1}{2}$ வாசி
சில்லறை விளம்பரங்களுக்கு ரூபாத்தொகை முற்காசு கட்டவேண்டும்.

புத்தகம்—1. { யாழ்ப்பாணம்—சுன்னாகம்:—அக்ஷயஹூ பங்குனிமீ உஎஉ (1927 எப்பிரல் 9) சனிக்கிழமை. } இலக்கம்—3.


உ
கடவுள் துணை.

அங்கிங்கெனுதபடியெங்கும்பிரகாசமா
 யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்குளே
 யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
 தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளெலாந்
 தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
 வெங்கணும்பெருவழக்காய்
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாய்
 யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
 கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவுங்
 கருதியஞ்சலிசெய்குவாம்.

---

## யாழ்ப்பாணம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம் சுன்னாகம்.

கீழ்க்கண்டிருக்கும் கனவான்கள்தாங்கள் இச்சங்கத்தின் போஷர்களாக இருப்பதற்குச் சம்மதப் பட்டிருக்கிறார்கள்.

(1) ஸ்ரீமான் சேர் அம்பலவாணர் கனகசபை அவர்கள்

(2) கௌரவ ஸ்ரீமான் W. துரைசுவாமி அவர்கள்

(3) கௌரவ ஸ்ரீமான் எஸ். ராஜரத்தினம் அவர்கள்

(4) கௌரவ ஸ்ரீமான் த. மு. சப்ரத்தினம் அவர்கள்

இப்பொழுது நாங்கள் சங்கம் தொடங்கி ஏறக்குறைய 3 மாத மாகின்றது. பள்ளிக்கூடம் கட்டுவதற்கான அலுவல்கள் நடந்து வருகின்றன. சங்கத்திற்கும் புதிய அங்கத்தினர்கள் தொகையாகச் சேர்கிறார்கள்.

சென்ற மாதத்தில் மாயிகம்பட்டி, மயிலணி, என்னும் இடங்களில், கிளைச்சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டன.

அங்கத்தினர்கள் தயவு செய்து தங்கள் மாதாந்த கட்டணங்களைக் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளவும்.

சித்திரை மாதம் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு அஸ்திவாரம் போடத்தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதைக் குறித்த விஷயங்களை வெளிவரும் துண்டுப் பத்திரிகைகளிலிற் காணவும்.

---

## உயிர்களைக் கொல்லாதீர்கள், ஊனை உண்ணாதீர்கள்.

—:0:—

(கூழிப்பிறை சிவனடியார் திருக்கூட்ட வெளியீடு)

தண்டமிழ் நாட்டு மக்களே! "தன்னுயிர் நீப்பினும் செய்யற்க, தான் பிறிதின்னுயிர் நீக்கும்வினை" என்பதை நினையுங்கள். பாவமூட்டையைச் சுமக்காதீர்கள். "ஆக்கிவினைசெய்" என்றபடி நீங்கள் செய்கின்ற எந்தச்செயலையும் சற்று எண்ணிப்பாருங்கள். "மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" மனம் குரங்குக்குணமுடையது. இந்த மனக்குரங்கை அடக்குங்கள் உங்களையாரேனும் பிடித்துக் கொன்றால் உங்கள் உறவினர்கள் பேசாதிருப்பார்களா? கொன்றவனைக் கொலைகாரனென்று சொல்லுகிறார்களே!

எந்த உயிரைக் கொன்றாலும், கொலைதான் என்பதை அறிவுள்ள மக்களாகிய நாம் உணருதல் வேண்டாமா? கேட்டாற் சுவாமிக்காகக் கொல்லுகிறோம் என்று சொல்லலாமா? முழுப்பூசினிக்காயை இலைச் சோற்றில் மறைக்க முடிந்தபாடா? சுவாமி உங்களை நேரில்வந்தா கேட்டு ஓலமிடுகிறது! என்ன கேட்டலறுகின்றது? வயிறு பசிக்கிறதென்றா? அப்படியானால் தன் வயிற்றுப்பசியைத் தீர்த்துக் கொள்ள வழிதெரியாதா சுவாமி உங்களை எப்படிக்காப்பாற்றும்? இதை நினைக்கும் பொழுது யாரோ ஒருவன் அம்மா பழையது-போடுங்கள். பசியாதவரந்தருகிறேன் என்றானாம்

இதைப் போலத்தான் கொலை கேட்டு நிற்கும் சுவாமிகளின் சக்திகளையும் நினைக்கவேண்டியதாகிறது. மேலும் சிரிப்பும்வருகின்றது.

நிதானியுங்கள். உங்கள் நம்பிக்கையை நாங்கள் கேலிசெய்யவில்லை. சுவாமிகளைக் கும்பிடவேண்டாமென்று நாங்கள் சொல்லவுமில்லை. உலகத்தையும் சுவாமிகளையும் ஏமாற்றி ஏழை ஆடு கோழிகளைக்கொன்று பக்குவமாய் ஆக்கி உண்டுவிட்டு, கோடாங்கி பூசாரிகளையும் பக்கபலமாய் வைத்துக்கொண்டு, கொலைப்பிரசாரமும் செய்கிறீர்களே! சாத்திரம், சமயம், வழக்கம் என்று சொல்லிக்கொண்டு செய்து வரும் திருட்டு வேலைகளுக்கெல்லாம் நாசகாலம்பிறந்துவிட்டது. கொலை, களவு, கள்ளுண்ணல், பொய்மொழிதல், காமம் என்னும ஐந்தும் கொடிய பாவங்கள் என்று நீதி நூல்கள் முறையிடுகின்றன.

மேலும் கற்றறிந்த பெரியோர்களெல்லாம். காய்கனிகளும் தானியங்களுமே சிறந்த அறிவையும். உடலுறுதியையும் தரத்தக்க உணவென்று சொல்லுகின்ற போதனையை நினையுங்கள். மேல் நாட்டினர்கள் கூடமரக்கறிச் சங்கம் என்று வைத்துக்கொண்டு, மது மாமிசாதிகளைவிலக்கி வருகிறார்கள்.

திருவள்ளுவர், தாயுமானவர், பட்டினத்தார் முதலிய ஒப்புயர்வில் பெரியார்கள் பிறந்த நாட்டினர்களாகிய நாம் உயிர்களைக்கொன்று, ஊன் அருந்துதல், மிக மிக மானக்கேடான செயலாகும்.

"அழகலாதன செயேல்" என்று சொல்லியுள்ளதை மறவாதீர்கள். தாமச குணம் தரும் மாமிசத்தை உண்ணாதீர்கள். கறுப்பன் மாரிகள் என்று தடித்தபெயரைச் சொல்லாதீர்கள். மனிதநீதிக்கு விரோதமான செயலை எந்நாளும் செய்யாதீர்கள்.

---

## நூறுண்டு வாழ்வு.

### புலையும் கொலையும் களவுந் தவிர்.

"அடுத்த நூற்றாண்டில் மனிதர்கள் சாதாரணமாக நூறாண்டு உயிர்வாழ்வார்கள். வருங்காலத்தில் சுகாதார விதிகளை அறிந்து அனுசரிப்பதால் வரையறையின்றி மனிதன் நீண்டநாள் உயிர்வாழமுடியும் என்று 'எல்'சர்வகலாசாலையைச்சேர்ந்த ஆசிரியர் இர்விங்பிஷர் சோதிடங் கூறுகிறார். மனிதனுக்குப் பிறப்பு, வளர்ச்சி, இளமை, முதுமை, மரணம் என்பவை இயற்கையானவை என்னுங் கொள்கை இப்போது அடிபட்டுப் போய்விட்டதாம். மரணத்திற்கு இயற்கையான வயது என்பது ஒன்று கிடையாதென உயிர்நூல்வல்லார் ஒப்புக்கொண்டு விட்டார்களாம் வருங்காலத்தில் மனிதன் பரிபூரணமான உடலுடன் உயிர்வாழ ஆரம்பிப்பான். புதிய சுகாதார முறைகளின்படி வாழ்க்கை நடத்துவான். பின்னர் உடல் யந்திரத்திற்கு ஏதேனும்பழுது நேர்ந்தாலன்றி அது ஓடிக்கொண்டே யிருக்கும். கடிகாரத்துக்கு எப்படி இயற்கை மரணங்கிடையாதோ? ஏதேனும் பழுதுநேர்ந்தாலன்றி அது ஓடிக்கொண்டே யிருக்கும். ஏதேனும் ஒருகருவி ஊனமுற்றால்மட்டும் நிற்கிறதோ அப்படியே உடல்யந்திரமும் இருக்கும். புதிய சுகாதார விதிகள் என்பவை நிலைமையில் பழையவிதிகளே என்றும் அவ்வாசிரியர் கூறுகிறார். மதுவகைகள், புகையிலை, தேயிலை, காப்பி, மிதமிஞ்ச தேகாப்பியாசமின்மை, தூக்கமின்மை, சூரியவெளிச்சமின்மை, தீர்க்காயுசுவாசம் விடாமை, ஒழுங்கற்ற உணவு பிற்பகலில் கெடுதி, கண்ணுக்கு அதிக உழைப்பு தவறான உடைவகைகளினால் உடம்பின் அவயவங்கள் ஒடுங்குதல் ஆகிய இவற்றினால் மனிதவர்க்கம் தனக்குத்தானே தீங்குதேடிக் கொள்கிறதென்று அவர் சொல்கிறார். (லோகோபகாரி)

---

## நீதிமன்றங்களும் தாபரிப்பு வழக்குகளும்.

ஒருவன் தற்செயலாய் ஓர் பொலிஸ்கோட்டுக்குப்போக நேர்ந்தால், முதலில் கண்ணுக்குத் தென்படுவது, பெண்கள் ஓர் கூட்டமாக விருந்தைகளில் காத்திருப்பது. இப்பெண் என் இவ்வளவு தொகையாய்க் கோட்டடிக்கு வந்திருக்கிறார்கள் என்று விசாரிக்குங்கால் அவர்களில் 10ல் 8 பேர் தாபரிபபு வழக்குகளுக்காக வந்திருப்பதாகப் புலப்படுகிறது. ஐயோபாவம் இவ்வினையர்கள் தங்கள் தங்களுடைய வீடுகளிலிருந்து தங்கள் வீட்டுக் காரியங்களைக் கவனிப்பதை விட்டு, அச்சமாசாரத்தை நடத்த வேண்டிய புண்ணியவான்களை கோட்டுமூலமாகக் கட்டளைவிட்டோ அல்லது விருந்து விட்டோ பிடிக்கவேண்டி யிருக்கிறது இவ் வழக்குகளில் 100க்கு 70பேர் கட்டளைச்சட்டத்தின்படியோ அல்லது சமய முறைப்படியோ கலியாணம்செய்தவர்கள். ஆனால், இடையில், ஓர் குழந்தை பிறந்தபிறகோ அல்லது அதற்குமுன்னோ, பராப்த்ரி வருகையாலோ அல்லது, குடியாலோ, அல்லது சீதனப்பிசகாலோ, இப்புருஷர்கள் தாங்களே வலியச் சென்று பொருத்த நிமித்தம்பார்த்து, நாள் பார்த்து, லக்கினங்குறித்து, அக்கினிசாட்சியாகவும், அருந்ததிசாட்சியாகவும், பாணிக்கிரகணம்செய்த பெண்டிர்களை நடுவழியேவிட்டு சீவியத்துக்கு வழியில்லாமல் விடுகிறது மிகவும் கேவலமாகத் தோன்றுகிறது மேலும் இப்பெண்பிள்ளைகள் வழக்குவைத்து அறவிடும்காசு மிகவும் கொஞ்சம் 2. 50சதம்முதல் 10. 00வரைக்கு இப்பஞ்சகாலத்தில் இவர்கள் இத்தொகைகளைக்கொண்டு சீவியம் எப்படி நடத்துகிறார்கள் என்பது ஆச்சரியமான விஷயம். சிலர் இக்காசுகளை 2 அல்லது 3மாதத்திற்கு கோட்டால் நோட்டிஸ் வந்தாலின்றி கொடுப்பதில்லை, கொடுத்தாலும் மனியாடர் கமிஷன் கழிக்கவேண்டி யிருக்கிறது. இதற்கு எவ்விடத்தில் பிசகுஇருக்கிறது என்று நாங்கள் ஆராய்ந்தோய்ந்துஇருதாரத்தாருக்கும்புத்தி புகட்டக்கூடிய விஷயத்தில் உழைக்கவேண்டும்.

---

## யாழ்ப்பாணமுங் குடியும்.

அரசினரின் விசேஷ உத்தரவுடன் சாராயம் பிறதேச குடிவகைகள் முதலியன மருந்து போல் குடிப்பதற்கும் சந்தோஷ ஆராதனைகளிற் பாவிப்பதற்கும் இன்னும் முக்கியமெனக்கண்ட தேவைகளுக்கும் பெற்றுக்கொள்ளும்படியாகவும் ஒருமாசத்தில் 300கலனுக்கு மேற்படாத சாராயமும் 50கலனுக்கு மேற்படாத பிறதேச குடிவகைகளும் நம் யாழ்ப்பாணத்திலும் இதைச்சேர்ந்த தீவுகளிலும் செலவாக்கலாமென மதுபரிபாலன சபையார் சில ஒழுங்குசெய்ய யோசித்திருக் கின்றனராம். குடிவகை குடிப்பதற்கு விரும்புவோர் ஏசண்டுத்துரைக்கு மனுப்பத்திரம் அனுப்பல்வேண்டும். அப்பத்திரங்களை ஏசண்டுத்துரை பார்த்து பத்திரக்காரர்கள் வழமையாய்க் குடிவகை பாவிக்கப் பழகினவர்களோ வென்றும் அவர்களின் வரும்படிக்கும் சீவியத்திற்கும் குடிவகை அவசியந் தேள்வையோ வென்றும் ஏசண்டுத்துரை விசாரணைசெய்து குறித்தஅளவுடன் குடிவகை வாங்குவதற்கு உத்தரவு செய்வார். விசேடமாக எதுவும் நியாயமிருந்தாலன்றி ஒரு ஆள் ஒருமாசத்திற்கு (4. எட்டுத்திரும்) போத்தல் குடிவகைக்குமேற்படாமலும் இக் குடிவகைகள் அரசாட்சியாரால் அமைக்கப்படும் குதத்திலிருந்து கொடுக்கப்படும் அக் குதத்திலே இருந்து குடிப்பதற்கு உத்தரவில்லை. யாழ்ப்பாணத்தில் வேறு எவ்விதமாயும் சாராயமாவது பிறதேச குடிவகைளாவது இறக்குமதி செய்யப்படாது பிரயாணிகள் குடிவகையுடன் வருவதற்கு விசேட உத்தரவு பெறல்வேண்டும். போத்தல்களெல்லாம் அரசினரால் முத்திரையிடப்பட்டு இலக்கமும் பதியவேண்டுமாம். குடிக்க உத்தரவு பெற்றவரின்பத்திரத்தில் அவரிடங்கொடுக்கும்போத்தலின் இலக்கமும் பதியப்படும். அரசாட்சியாரின் முத்திரை பதியப்பெறாத போத்தலில் குடிவகை வைத்திருத்தல் குற்றமாகும் பிரயாணிகளாய யாழ்ப்பாணம் வருவோர் தமது குடிவகையையுங் கொண்டுவருதற்கு அல்லது அரசாட்சிக் குதத்தில் வாங்குவதற்கு ஏசண்டர் உத்தரவு கொடுக்கலாம். 24போத்தல்களுக்கு மேல் உத்தரவுகிடையாது மேலே குறிப்பிட்டபடி 300கலன் சாராயமும் 50கலன் பிறதேச வகுப்பும் போதியதல்லவென்று கண்டால் ஏசண்டுத்துரை தம் ஆலோசனைச் சபையாருடன் யோசித்து அளவைக்கூட்டிக் கொள்ளலாம்

கள்ளுக்கும் அப்படியேமரத்திற்கு உத்தரவெடுத்து கள்ளுச் சேர்க்கலாம் கோடா செய்வதற்கும் அப்பஞ் செய்வதற்கும் கள்ளுச் சேர்ப்பதற்கும் ஏசண்டர் உத்தரவுகொடுக்கலாம் உத்தரவு கொடுக்கும் ஒவ்வொரு மரத்திற்கும் வருடவீதம் 15ரூபா வீதம் வரியறவிடப்படும் குடிக்கிறதற்குத் தேவையான கள்ளைப் பனையிலிருந்து இறக்கலாம். 500 மரங்களுக்கே உத்திரவு கொடுக்கலாம். இத்தொகை போதியதல்லவென்று கண்டால் கூட்டிக் கொள்ளலாம். இப்புதிய முறைகள் வருகிற ஐப்பசி மாதத்தோடு அரங்கத்தில்வருமென அரசினர் யோசிக்கின்றனராம்.

---

## நீதி விளக்கம்.

ஒருவன் ஆயிரம் நீதிபோதனைகளை எடுத்துச் சனங்களுக்குரைப்பினும் ஒரு நல்ல போதனையைத் தான் நடந்து காட்டுதலே சிறப்பு. மற்றவர் வாயினாற் சொல்லுவதை காதினாற் கேட்டு "பேஷ்" நல்ல போதனை என மெச்சிப் புகழ்ந்து பேசி உடனுக்குடனே மறந்துவிடுகின்றனர். உண்மையுடைய ஒருவர் தம் செய்கையிற் செய்வதை மற்றவர் கண்ணாற் பார்த்துவிடின் அவ்விஷயம் மனதில் மிகவும் பதிந்துவிடுகிறது. அது ஒருநாட் பழக்கத்தில் வந்துவிடுகிறது. காதினாற்கேட்பதைவிடக் கண்களாற் கண்டதே நீடித்து ஞாபகமிருக்கிறது.

*　　*　　*

ஒன்றை ஒருவன் கருதி அடையும்வரையில் அதை மிக அருமையாகவும் பெருமையாகவும் கருதவேண்டியிருக்கிறது. அது அவனுக்குக் கிட்டுவது அருமையாயிருக்கும்வரையில் அதன் மதிப்பும் பெருமையும் அதிகப்பட்டு வளர்ந்துகொண்டே போகிறது. அதிட்டவசத்தினாற் கிடைத்துவிட்டாலோ அதற்குமுன்னர் அலட்சியம் வந்துவிடுகிறது. எவ்வளவு கஷ்டமில்லாது சுலபத்தில் கிட்டுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு மதிப்புங் குறைந்து அவமதிப்புமதிகமடைகிறது. கிடைக்கும்வரை பெரிது, கிடைத்துவிடின் சிறிது.

*　　*　　*

ஒருவனுக்கு மனைவியாக வரப்போகிறவளைப்பற்றி அவன் விவாகமாகுமுன் எவ்வளவு வேண்டுமாயினும் கேலி செய்து அவன்முன் பேசலாம். பேச்செல்லாம் பரிகாசமென்றநிரையில் அடங்கிவிடுகிறது. உண்மையில் விவாகமான பின்னரோ கணவன்முன் அவன்மனைவியைப்பற்றி யாதொன்றும் பரிகாசஞ் சொல்வதற்கில்லை; தட்டித்தவறி எதாவதுசொல்லிவிட்டால் வினையாகவே முடியுமாம்.

*　　*　　*

ஒருவரது நட்பும் நேசமும் நீடித்துப் பொருந்தி நிற்கவேண்டுமாயின் அவரிடத்தில் யாதொரு காரியார்த்தமாயும் பெற வரும் உதவியை வைத்துக்கொள்ளுதல் கூடாது. கூடியவரை சிநேகனது ஒத்தாசை உதவியைப் பெறுதிருத்தல்வேண்டும். ஒருமுறை உதவியைப் பெற்றுக்கொண்டோமோ மறுமுறை உதவிசெய்ய முன்வரமாட்டார்கள். உங்கள் உதவி வேண்டாம் வேண்டாம் என மறுத்துக்கொண்டிருந்தால் உதவிசெய்கிறோம் உதவிசெய்கிறோம் என்று முன்வந்து சொல்வர். வேண்டுமென்றாலோ சமீபத்தில் ஒருவரையுங் காண முடியாது. நண்பனிடத்தில் நீண்டநாள் பழகி வசிக்கலாகாது. அப்படி வசித்தோமாயின் முன்பு அன்புதவழ் சாந்தத்தோடு அழகமைந்து காணப்பட்ட நண்பனது முகத்தைக் கோபத் தனலில்

தொடர்ச்சி 3-ம் பக்கம்.

## விசேஷ அறிக்கை.

இந்த யாழ்ப்பாணத்தின் ஒடுக்கப்பட்டும், தாழ்த்தப்பட்டுமிருக்கும் சாதியர்களாகிய நாங்கள் சீர்திருத்தம் கல்வியின்றி இருக்கும் நிலைமையைப் பார்க்கும் பொழுது பரிதாபமாயிருக்கின்றது.

உங்களுக்கு உங்களைச் சீர்திருத்திக்கொள்வதற்கும் மற்றைய சாதியார்களைப் போல முன்னேற்றம் அடையவும் விருப்பமிருந்தால் இந்தச்சங்கத்தில் சேருங்கள். ஒரு சங்கத்தில் சேர்ந்து தாங்கள் ஐக்கியமாயிருந்து ஒத்து உழைத்தால் எப்படி முன்னேற்ற மடையலாம் என்று சேர்ந்த பிறகுதான் விளங்கும். எங்களுடைய மக்களைப் படிப்பிப்பதற்காக ஆங்கிலமும் தமிழும் படிப்பிக்கக்கூடிய ஓர்பள்ளிக்கூடம் ஏற்படுத்துவது எங்கள் கோரிக்கை.

எங்களில்தட்டுக்கெட்டவர்களும் சேர்வதற்கு வசதியாகப் பிரவேசக் கட்டணமும், மாதாந்தக்கட்டணமும் சதம் 25 ஆக ஏற்பட்டிருக்கின்றது. போலி நியாயங்கள் பேசித்திரியும் வீணர்களின் வார்த்தைகளை நம்பி மோசம்போகாதீர்கள். எங்களுடைய கஷ்டங்களையும் நிர்ப்பாக்கிய நிலைமையையும் யாவரும் அறியும்படியாகவும் எங்கள் முன்னேற்றத்திற் காகவேண்டிய வழிகளுக்காகவும் சக்கத்தால் வெளிவரும் "திராவிடனை" ஆதரியுங்கள்.

திராவிடன் யாவராலும் வாங்கி வாசிக்கும் பொருட்டுச் செலவைக் கருதாது மிகவுங்குறைந்த சந்தாவாக வருஷம் ஒன்றுக்குத் தபாற்கூலி உட்பட 1-25 ஆகவும் வெளிப்படுத்தியிருக்கிறேம்.

சங்க கொம்மற்றியார்.

---

1. திராவிடனுக்குச் சந்தாதாராகச் சேர விரும்புங் கனவான்கள் முற்பணமனுப்பியேனும் அல்லது வி. பி. மூலமாயேனும் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. பணமனுப்புகிறவர்கள் பொக்கிஷதார் யாழ்ப்பாணம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம், சுன்னுகம் என விலாசமிட்டனுப்பவேண்டும்.

3. உள்ளூர்ச் சந்தாதாரர்களும் மேற்காட்டிய விதமே சந்தாத்தொகையைக் கட்டி ரசீது பெற்றுக் கொள்ளவும்.

4. கடிதமெழுதுவோர் தங்கள் விலாசத்தைத் தெளிவாய் ஒவ்வொருமுறையுமெழுதவேண்டும்.

திராவிடன் ஆபீஸ்,
சுன்னுகம்.

---

## விஷயதானம் புரிவோர்க்கு.

1. கல்வி ஞானம், தெய்வபக்தி, ராசவிசுவாசம், நல்லொழுக்கம், ஒற்றுமை, சிறுவர் சிறுமிகள் கற்றுக் கொள்ளவேண்டிய விதிகள். இன்னும் பொது நன்மையைக்கருதி எழுதி அனுப்பும் விஷயங்களை மிக வந்தனத்துடன் ஏற்கப்படும்.

2. விஷயதானம் புரிவோர் தெளிவாகக் கடிதத்தில் ஒரு பக்கத்தில் மையினுல் மட்டும் எழுதி அனுப்பவேண்டுகிறேம். அன்றியும் பெயர், விலாசம் இவைகளை ஒவ்வொரு முறையும் தெளிவாக எழுதியனுப்புவதோடு புனைபெயர் பூண்டுகொள்வோரும் தமது உண்மையான பெயரையும் விலாசத்தையும் வெளியிட்டே தீரவேண்டும்

3. அரசினருக்கு விரோதமாயும், மததூஷணையாயும், பிறருக்கு மனத்தாங்கலை உண்டாக்கக் கூடியதுமான விஷயங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. பத்திராதிபர்.

# திராவிடன்.

சுன்னாகம்:— 1927,
பங்குனிமீ 27உ சனிக்கிழமை.

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க, முன்னின்றுபின்னேக்காச்சொல். குறள்

## கண்ணிருந்தும் கபோதிகள்.

2

ஆண்மக்களுடைய திருவிளையாடல்கள் இவ்வாறிருக்க எங்களுடைய பெண்களுடைய நடை உடை பாவனைகளைக்குறித்து நாங்கள் கவனிக்கத்தக்க விஷயங்கள் அநேகமிருக்கின்றன. முதலாவது ஓர் பெண் உடுத்துவது அவளுடைய அங்கங்களைச் சரிவர மூடுவதற்காகவும், பெண்களுடைய அணிகலம் எனப்படும் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு, என்பவைகளைச் சீர்தூக்கிக் காட்டும் பொருட்டே ஆனல், (Dean-Inge) என்னும் ஆச்சாரியார் மொழிப்படி இந்நாட்களில் மேலைத்தேசங்களில் பெண்கள் (Ladies used to dress for dinner in my days, and now they undress for dinner) சாப்பாட்டு நேரங்களில் உடுக்காமல், உடுப்புகளை களைகிறுர்கள் என்பதைப் போல, மேலைத்தேச ஆசார, சீர்திருத்தங்களைக் கைக்கொண்டாடும், எங்கள் பெண்களில் பெரும்பாலோர், தங்களுடைய அவயவங்களை மூடுவதற்காக உடுப்பதைவிட்டு, அவைகளை மிகவும் மெல்லியதான ஓகண்டி (Organdi), வையில் (Voile) மடப் பிளான் (Madapolam) இன்னும் அநேகவிதமான நைசான சீலைகளைக்கொண்டு (Low-neck) கழுத்து இறங்கிய (Blouses or Jackets) என்னும் ரவிக்கைகளைத் தைத்துப் பாவிப்பதைவிட உள்ளுங்குப் போடும் படியான (Bodice) ரவிக்கையும், சிலர் அவைகளில் கோர்த்திருக்கும் (Ribbons and Laces) நாடாக்களும், ரேந்தைகளும், ஆடவர்கள் கண்களைக் கவரத்தக்கதாய் வெளிப்படையாகத் தோன்ற, சேலைகளின் முகதலைகளை தோளின்மேல் முழுதும் விரித்துப்போட்டு, அங்கத்தை மறைப்பதைவிட்டு ஜப்பானிய தேசத்துப் பெண்கள், உடுக்கும் பாவனையாக, முதுகில் ஓர் விதமான வால் வளர்ந்து தொங்கும் பாவனையாக, சொருகியோ, அல்லது ஊசிகளைக் கொண்டோ குத்தி; அந்நாளில் சுடலையில், வெட்டியான், உன் தாலியையாவது விற்று கோடி என்று கேட்ட நேரத்திலே தன்புருஷன் கட்டின தாலி புறத்தியான் கண்ணில் பட்டதே என்று ஏங்கி மரணை தப்பி வீழ்ந்தசந்திரமதி, எவ்வளவு மேன்மையாகத் தன் தாலியை நினைத்தாளோ, அவ்வழியில்தோன்றிய எங்கள் பெண்கள் ரத்தினங்களோ! தங்கள் தாலிக்கொடிகளைச் செய்த தட்டான்மார்கள், வேலைத்திறமையைக் காட்டவோ அல்லது, தாலிக்கொடியின் மதிப்பை பிறர் அறியும் பொருட்டோ! அல்லது, கலியாண விருப்பமின்றிகிடக்கும் மாப்பிள்ளைகளில் கலியாணத்தில் ஓர் விதமான உற்சாகத்தை உண்டாக்கும் பொருட்டோ. அல்லது; பொதுவில் இதர, வண்டிகள், மாடுகளுக்கு லைஸன்ஸ் (Licence) தகடுகள் இருப்பதுபோல தாங்களும், சுயேச்சையாய் திரியலாம். என்னும் லைஸன்ஸ் பெற்றிருக்கிறேம் என்பதைக் காட்டும்பொருட்டு தாலிக்கொடியை வெளியே விட்டு பார்ப்பதற்கு கண்களுக்கு ஓர் விதமான எரிச்சலைக்கொடுக்கின்றது.

இவ்விதமான ஆபாச உடைகளை அணியலாகாது என்று கத்தோலிக்கருடைய ஜெகத் குருவான (Pope) போப் அவர்கள் இப்படி உடை அணிந்திருப்பவர்களைத் தங்கள் கோயிலில் வரப்படாது என்று திட்டஞ்செய்திருக்கிறுர். எங்கள் பெண்களுக்குப் போப் யார்?

இவ்வித உடைகளும் சகோதரிகளில் பலர் தங்களுடைய மெல்லிய பாதங்களிலில் சாதாரணமான செருப்புகளை மாட்டிக் கொண்டு போவதை விட்டு மேலைத்தேசத்தியமாதிரியான (Shoes) சப்பாத்துக்களில், கால்மேஸ் (Stockings) என்னும் உறைகளிலில்விட்டு, காராக்கிரகத்தில் அடைப்பதைப்போல, இவ்வரும் பாதங்களை, மேற் சொல்லிய சப்பாத்துக்களிட்டு (Lace) கயிறுகளைக்கொண்டு இறுகக்கட்டிவிட்டு, நடந்து போகும் கோலமோ அலங்கோலமாகயிருக்கின்றது. இவர்கள் இவ்விதமான (High-heels) உயர்ந்த குதிகள் உள்ள சப்பாத்துடன் நடப்பது, இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நாங்கள், சினுவில் கொஞ்சம் கொஞ்ச வருஷங்களுக்கு முன் சீனப்பெண்கள் தங்களுடைய குறுகிய பாதங்களோடு எப்படி நடந்திருக்கவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

மேலும் இவர்கள் உடையின் (Taste) பற்று இவ்வளவிலிருக்க, இவர்கள் (Toilet) மேனிமினுக்கைச் சற்றுப் பார்ப்போம். மிகவும் பேர்போன டாக்டர் மார்களால் மிகவும் கூடாது என்று சொல்லப்படும் சுண்ணும்புக் கட்டிகளை (Soap) ஸோப் என்னும் நாகரீகப் பெயருடன், வாங்கி, உபயோகிக்கிறதனுல், மஞ்சள் குளிப்பு, மண்ணுகி, அநேகர், மீசை, தாடியுடனும் உடம்பில் ரோமங்களுடன் இருக்கநேரிடுகிறது. அத்துடன் மிகவும் வடிவுள்ளதும், வசீகரமாயுள்ள தங்கள் முகங்களை (Chalk) சோக் என்னும் சுண்ணும்பைக் கொண்டு (Face Powder) புசல்மா என்னும் திருநாமத்துடன், எங்கள் ஊரினுடைய சீதோஷ்ணஸ்திதியையும் கவனியாது, முகத்தினுள்ள துவாரங்களை யடைக்கும்படியாக பூசுகிறுர்கள். இப்பூச்சுகளிலும் அநேகவிதம் உண்டு. இது அவரவர்களுடைய படிப்பையும் பயிர்ச்சியையும் பொருந்தும் சிலர் கைகள், காதுகளை விட்டு முகத்திற்குமாத்திரம் பூசுகிறுர்கள். பெரும் பாலர் இன்னநிற மாவு இந்த நிறத் தோலுக்கும் இந்த நேரத்திற்கும், இந்த நிறமான உடைக்கும் பொருந்தும் என்பதை அறியாது, கருமையாயுள்ள ஒருவன் (Violet) ஓர்விதமான சிகப்பு மாவைப் பூசிக்கொண்டு வெளிப்படும்பொழுது பார்ப்பதற்கு எவ்வளவு கேவலமாயிருக்கின்றது. பார்ப்பதற்கே இவ்வளவு என்றுல், கூட்டிக் கொண்டு போகும் ஆண்பிள்ளைகள் என்ன எண்ணுகின்றுர்களோ? ஆனல் காக்கைக்குந் தன் குஞ்சு பொன் குஞ்சு"போலும்.

இன்னும் எங்களுடையஸ்திரீ ரத்தனங்களுடைய வீண் சிலவுடாப்பு எழுத நீளும் சிலவற்றைக் கூறுவோம். நாகரீகமானவர்களுக்கு ஒரு கட்டை தூரம் போகவும் மோட்டார் வேண்டும், சற்று தலையிடி வந்தவுடன் (Inuvil Hospital) போகவேண்டும், ஒவ்வோர் கலியாண வீட்டுக்கும் போக ஓர் புதிய பனரிஸ சேலை தேர்வை (புருஷனுடைய வரும்படி கவனிக்க இடமில்லை) ஆனல் இவ்விடத்தில் கமீனியா (Kaminia) கேஷ்ரன்ஜன் (Keshranjan) எண்ணைகளைப் பற்றிச் சொல்ல விவரிக்கும். எங்களுடைய சிறுமியர்களை நாங்கள் வீட்டை விட்டு வெளியே உடுத்தி போகவிடும் உடைகளை கவனித்தாலோ, மிகவும் பரிதாபகரமாயிருக்கின்றது. அவர்கள் சிறு குழந்தைதுவக்கம் பருவமடைந்தவர்கள் அல்லது அப்பிராயத்தினர்கள் வரைக்கும் தலையணை உறைகள் போன்ற (Frock) புராக் என்னும் (Short-Skirts) குறுகிய பாவாடைகளுடன் வெளியே போகக்காட்டுவது எங்களுக்கு எவ்வளவோ மனவருத்தத்தை உண்டாக்குகின்றது. எங்கள்ஊரில் எத்தனையோ ஜவுளிக்கடைகள் இருக்க இவர்கள் உடுக்க சிற்றுடைகளுக்குப் பஞ்சமா? சோளகக் காற்று வீசும் நாட்களிலில் இவர்கள் இரு கைகளிலும் (Walking Library) உலாவும் வாசிக சாலைகள் என்று கருதும்படி, சிறுகுன்றுகளைப்போல நாடியை முட்டக்கூடிய உயரம் புத்தகங்களைக் கொண்டு போகும்போது அந்தரிக்கும் அந்தரிப்பைப் பார்த்தால் ஆ? இப்பிள்ளைகளைப் பெற்றேர்கள் எவ்விதமானமூடாத்துமாக்களாயிருக்க வேண்டுமென்று (எண்ண) நேரிடுகிறது. ஆனல் இவர்கள் விவேகிகளென்றும், நாகரீகம் பெற்றவர்கள் என்று எண்ணும் பட்சத்தில் இவ்வித ஆடைகளை அணிந்த தங்கள் கண்களைப்போல் பார்க்கும் பிள்ளைகளுக்கு (Ladies Bycycle) சைகில்கள் வாங்கிக்கொடுத்துப் பள்ளிக்கு போகவிடுவார்கள் என்று நம்புகிறேம். இவ்வித உடை உடுத்து அவ்வித நூதன வாகனங்கள் ஏறிச்சென்றுல் தான் நம்முடைய சிறுமியர்கள் இந்நாட்டிற் கேற்ற அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் குணங்களின்றி, அம்மாமாரல் ஆமோதிக்கப்பட்டு கெதியாக (Equality) சமத்துவம் பெறுவதற்கும், இப்போது இவர்கள்படிக்கும் (English Literature) இங்கிலீஷ் பாஷையிலுள்ள (Novels) நவீனங்களில் உள்ள கதாநாயகிகள் போலவர வழியிருக்கும்.

---

தன் மதிப்பில்லாதவர் பிறர்மதிப்பிற்கும் உரியவராகார்என்பது திண்ணம். 'குமரன்'

## அன்பே சாந்தம்.

அன்பு என்னும் அறிவுக்கு மேலாக நாமெதையும் குறிப்பிடுதல் அநாவசியம். இருந்தும் நம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் நினைப்பிலும் எண்ணத்திலும் மனத்திலும் இடைவிடாச் சிந்தனை கொண்டு அன்பு என்னும் அமிர்தத்தை உதயமாக்கி அதன் பயனை யாவரும் அங்கீகரித்துப் பயனடைகிறதற்கு ஏற்றவிதமான வழிதுறைகளில் உழைத்து அன்பின் மகத்துவத்தைப் பெருக்கும்படி முன்னேற்ற வழிகளில் இருக்கும் தடைகளை நீக்கி ஒழுக்க முதலிய நற்காரியாதிகளுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது கல்வியே. கல்வியென்னும் ஊற்று மக்களின் மனங்களினின்றும் பெருக்கெடுத்திராது ஊன்றிய அன்பு, ஒழுக்கத்துடன் கூடிய ஆசாரத்தோடு ஒழுகினுலும் ஒரு சிறிதளவேனும் பயனடைவதற்கில்லை யென்பதே முடிபு இன்னும் உங்களின்பின் இளைஞர்களின் வாழ்வுந் தாழ்வும் உங்கள் கையிலிருக்கிறது. நீங்களே சிந்திக்கவேண்டும். நீங்களே உங்கள் ஒற்றுமையைக்கொண்டு உற்சாகங்கொடுத்து தொடங்கும் பள்ளிக்கூடத்திற்கு உங்களாலியன்றபொருளுதவி புரிந்து கடமைப்பட்டவர்களாய் முன்வருவீர்களென்று நம்புகின்றேம். இன்னும் மற்றவர்களாகிய உயர்சாதியினர்கள் உங்களைக் கைதூக்கிவிடுவார்களென்றும் முன்னேற்றிவிடுவார்களென்றும் எதிர்பார்க்கும்வரையிலும் நீங்கள் முன்னுக்குவருதல் கடினம். தங்களைத் தாங்களே தட்டி எழுப்பிக் கொள்ளவேண்டும். மற்றவர் நம்மை மதித்து நமக்காய் எழுப்பும்வரையிலும் நீங்கள் கண்விழியாது காத்துக்கொண்டிருக்கக்கூடாது. ஏனெனில் உங்களுக்குச் சீர்திருத்தம் கல்வி ஒழுக்கம் ஆசாரம் முதலிய மேம்பாடு அவசியம் வேண்டுமென்று கௌரவத்திற்குக் கூறுவோர் பலரேயாவர். உண்மையில் உங்கள் அநாசார நடத்தைகளை ஒத்து உங்களையும் கடவுளால் உண்டாக்கிய மனிதர்களென ஒன்றுபட நினைப்போர் சிலரிலும் சிலரேயாவர். இச்சிலருள்ளும் ஊருக்கும் தம் மனிதருக்கும் அஞ்சுவோர் பலராவர். வழக்க பழக்கமில்லாத எதையுஞ் செய்யக் கூசுவோர் இன்னுமதிகமாவர். இப்படியே உங்கள் மத்தியில் எதுவுஞ் சொல்லி நோகாதபடி தந்தரங்கொண்டு தாயைப் பழித்து மகள் அவசாரியான கதைபோன்று இல்லாது தாழ்த்தப்பட்டவர்களென்னும் கூடா ஒழுக்கம் முதலிய கொடும் வழக்கம் முற்றும் உங்களைவிட்டு நீங்குவதற்கு நீங்களே ஊக்கத்துடன் முயலவேண்டும். உங்களை மற்றவர்கள் அறியும்படிக்கு நல்லவிதமாய் உருமாறி நல்ல சுசீலத்துடன் தோன்றவேண்டும். யாருடனும் மரியாதை பேணி இணக்கமறிந்து சிநேகபான்மையைக் கைக்கொண்டு ஒழுகுவதோடு உங்கள் சாதியையாவது, குலத்தையாவது கெடுத்து சடார் பிடார் என்பன போன்ற வீரமில்லாத் தன்மைகளுக்கு இடங்கொடாதீர்கள். நம் மாட்சிமை தங்கிய பிரிட்டிஸ் கவண்மேந்தின் பிரஜைகள் என்பதை மறவாதிருங்கள். உங்களின் சம உரிமையை வாதாடியும் பெறுவதற்குப் பின்வாங்காதீர்கள். உங்கள் பயங்கொள்ளித்தனத்தைச் சமுத்திரத்தில்வீசுங்கள். "பொறுத்தார் பூமியாள்வர்" என்பது பழமொழி. அதுபோல் யார்யார் என்னசொன்னுலும், எத்தீமைசெய்தாலுங் நாம் பொறுத்துக்கொண்டு நம் காரியத்தில் கண்ணுங் கருத்துமாக இருப்பதே நல்லது. பொறுமையுள்ளவனுக்குப் பகைமையும் தீங்கும் கிடையா. யாவரும் நல்லவனென்று அவனைப் புகழ்வார்கள். பிறர் அடையும் உயர்வைக் கண்டு நாம் மனம் எரியக்கூடாது. அங்ஙனம் பொறுமைப்படுகிறவன் குடியுடன் கெடுவான். குறுகிய அறிவுடைய மூடன்தான் பிறர்வாழ்வு கண்டு பொறுது வருந்துவான்.

---

## பொதுச் சமாச்சாரம்.

புதுவருஷ சோபனம் பிரபவஞல சித்திரைமீ 1-ந்திகதி புதன்கிழமை மாலை 6 மணி 2 மினிற்றில் ஸ்ரீபிரபவ வருஷம் பிறக்கும் ஆதலின் நம் சங்கத்தார்க்கும் திராவிடனின் அபிமானிகளுக்கும் மற்றும் புண்ணிய சீலர்களாகிய பிரபுக்களுக்கும் புதுவருஷ சோபனங் கூறுகின்றேம். சுபம்.

---

நம் இலங்கைத் தேசாதிபதியாக விருக்கும் சேர் கியூஸ் கிளிவோட் அவர்கள் வரும் ஆகஸ்ட் மாதம் வரையில் தொடுவாய் இராச்சியப் பகுதிகளுக்கு தேசாதிபதியாகிறுர். சேர் ஹேர்பேட் ஜேம்ஸ் ஸ்ரான்லி அவர்கள் இலங்கைத் தேசாதிபதியாக நியமனம் பெற்றிருக்கின்றனராம்.

---

### கள்ளுச்சாராயம் தடுக்கப்பட்டன.

தேசாதிபதியவர்கள் சட்டநிரூபணசபையின் சம்மதத்தோடு முல்லைத்தீவு டிஸ்திறிக்கிலிருந்து யாழ்ப்பாண டிஸ்திறிக்குச் சாராயமும் கள்ளும் கொண்டுவரப் படாதெனத் தடுத்திருக்கின்றனராம்.

இந்துசமயப்பிரவேசம் சென்ற மாசம் இந்தியாவில் ஜெமல்பூரிலிருந்து எட்டுமைல் தூரத்துள்ள கடம்தால் என்னுமிடத்தில் வசிக்கும் நூறுகுடும்பங்கள் மனந்திரும்பி இந்துசமயப் பிரவேசஞ் செய்தனராம்.

சேலம் தாலுகா வேம்படிதாளத்தில் சில தினங்களுக்குமுன் ஓர் பெண் எட்டுமாத கர்ப்பத்தில் தலை இரண்டு உடல் ஒன்று கைகள் நான்கு கால்கள் நான்குடன் ஒரு சிசு பிறந்து சில மணித்தியலத்தின்பின் உறந்து விட்டதாம்.

சென்ற மூன்றுமாதத்தில் லண்டன் வீதியில் மோட்டர் வண்டிகளால் உயிரிழந்தவர்களின் தொகை இருநூற்றைம்பதாம். காயமடைந்தவர்கள் இன்னும் அதிகமாம். மொத்தத்தில் மூன்றுமாதத்தில் மோட்டர் விபத்துக்கானானவர்கள் தொகை இருபத்தையாயிரமாம்

திருநெல்வேலி தெற்குப் புதுத்தெருவில் வசிக்கும் நடுவயதுள்ள விதவை ஒரு குழந்தையைப் பெற்றுத் தெருவுக்குப் பின்னுள்ள வாய்க்காலில் போட்டுவிட்டாளாம். பிள்ளையைப்பெற்ற விதவையை அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கிறார்களாம்.

செல்வர் வீட்டு மாடுகளுக்குக் கிடைக்கும் தீனியைவிட நாள்முழுதும் பாடுபட்டுழைக்கும் ஏழைக் கூலிகளுக்கு குறைவாக உணவுகிடைக்கிறது. கவர்னர் வீட்டுக் குதிரைக்குக் கிடைக்கின்ற தீனி ஏழைகளுக்குக் கிடைப்பதில்லையென்று சக்ளத்வாலா கூறுகிறார்

கலிகாலதீபம். இது யாழ்ப்பாணம் காரைநகரிலிருந்து மசாமொருமுறை பூரணைதோறும் வெளியிடப்படும் ஓர் தமிழ்ப் பத்திரிகை. இதில் இந்து சமயிகள் அவசியங் கவனிக்க வேண்டிய பல அரியவிஷயங்கள் பொது விஷயங்கள் வெளிவருகின்றன. சந்தா உள்ளூருக்கு வருஷமொன்றுக்கு ரூபா1-00 வெளியூருக்கு 2-00 மலாய்நாட்டிற்கு றிங்கி 2.

மானேசரும் பத்திராதிபரும் மு. சபாரத்தின ஐயர் காரைநகர் யாழ்ப்பாணம்.

வடநாட்டில் சண்டா என்னுமிடத்துக்கு மகாத்துமாகாந்தி அவர்கள் போயிருந்தபோது அவருக்குப் பூமாலை போட்டார்களாம் அதுபற்றி அவர்பின்வருமாறு கூறினாராம்:—

இப்பூமாலைகளை நான் என்ன செய்வது? மாலைகளையணிந்து மகிழ்வதற்கு இதுசமையமல்ல ஏழைகளுக்கு கிடைக்க முடியாதபால் முதலியவை அருந்தவும் இதுசமையமல்ல. நான் அருந்தும் சிறிதளவுபாலையும் தியாகம் செய்து பட்டினியால் துன்புறும் ஏழைப் பெண்மணிகளுக்குதவ முடியவில்லையே யென்று என் உள்ளம் வருந்துகின்றது. ஆனால் அவர்களுக்கு ஊழியஞ்செய்ய நான் உயிரோடிருப்பதற்குப் பால் அவசியமாகிறது? கருதி விருப்பமில்லாமல் அதை அருந்திவருகிறேன். ஆதலின் பூமாலைகளில் பணத்தை வீணாக்க வேண்டாமென்று உங்களைப் பெரிதும் வேண்டிக்கொள்கிறேன். பூமாலையில் போடும் ஒவ்வொரு ரூபாயையுங் கொண்டு பதினாறு ஏழை ஸ்திரீகளுக்கு ஒரு வேளை உணவளிக்கலாம்

சில தினங்களுக்குமுன் கோண்டாவிலில் வசிக்கும் நம் சாகியத்தாராகிய தாழ்த்தப்பட்ட வருப்பினருக்கும் வேளாளருக்கு மிடையே உண்டான சச்சரவுகாரணமாக யேற்பட்ட மனத்தாங்கல் னிமித்தமாய் தாழ்த்தப்பட்டவர்கள் இருபது குடும்பம்வரை கிறீஸ்துமதத்தில் சேருவதற்கு முயற்சித்தனராம் இதைக் கேள்வியால் அறிந்த நம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்க தலைவரான ஸ்ரீமாந் M. S. இராசரத்தினம் அவர்களும் வேறும் பரோபகாரமுடைய பிரபுக்களும் கோண்டாவிலில் பிள்ளையார் கோவிலடியில் ஓர் பகிரங்க கூட்டம் கூடி மேற்படி இருபகுதியாரின் மனத்திருப்திக்கும் வழிகாட்டி தாழ்த்தப்பட்டவரின் முன்னேற்றத்துக்குரிய கல்விவிஷயமாய் அவர்களுக்கும் ஓர் பள்ளிக்கூடம் ஸ்தாபித்து நடத்துவதாகயறிந்து நாமெல்லாம் மிகவும் கடமைப்பாடுடையவர்களாக இருக்கின்றோமென (திருவாளர்) யாழ்ப்பாணம் சைவவித்தியா அபிவிர்த்திச் சங்கத்தாருக்கு அறிவிக்கின்றோம்.

குருநாக்கலைச்சார்ந்த வாரியப்போலா என்னுங் கிராமத்தில் வசிக்கும் குடிகாரன் ஒருவன் வெறிகொண்ட வேளைகளில் தன்பெண்டாட்டிக்கும் குழந்தைக்கும் அடித்து கலகமிடுவது வழக்கம். குடிக்கும் சூதாட்டத்திற்குமாய் தன்னிடத்திலுள்ள பொருள்களையும் தன் மனைவியிடத்துள்ள பொருள்கள் யாவற்றையும் அழித்துவிட்டான் வழக்கம்போல மனைவியுடன் கலகமிட்டபின் வெளியே சென்று வேண்டியமட்டுங் குடித்து வீட்டுக்குத் திரும்பினான். அன்றிரவு சமைப்பதற்கு ஒன்றுமில்லாமையினால் மனைவியும் குழந்தையும் பசியுடன் படுத்து நித்திரையாய்க் கிடந்தார்கள். குடிகாரன் அங்குவரும்பொழுது அவர்கள் படுத்திருப்பதையும் தனக்கு சாப்பாடு இல்லாதிருப்பதையுங்கண்டு கோபம் அதிகம்கொண்டு அங்கிருந்த கத்தியொன்றினாலே மனைவியையும் அறியாத ஆண்குழந்தையையும் வெட்டிக் கொன்றுவிட்டான். உயிருடனிருந்தால் தனக்கும் மரணம் வருமெனப்பயந்து குடிகாரன், ஒரு மரத்திலே தூங்கி இறந்தான் பெண்ணுங் குழந்தையும் இரத்தவெள்ளத்துடன் இறந்து கிடப்பதையும் மகாகுடிகாரன் மரத்திலே தூங்கியிருப்பதையும் அயலவர்கள் கண்டு விஷயத்தை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினார்களாம்.

இரத்தினபுரிக்குச் சேர்ந்த கிராமமொன்றில் வசிக்கும் சேதாஞ்சியா என்பவன் தன் மனையாட்டியுடன் கலகமிடுவது வழக்கம் புருஷன் தன்னை இரக்கமின்றி கொடூரமாய் நடத்துவதை தன் பிதாவுக்கு முறையிட்டாள் பிதாவும் இணங்கி தன்வீட்டுக்கு அவளை அழைத்துச் சென்றான். இதை அறிந்த கணவனுக்கு தன் மனைவிமீது சந்தேகமேற்பட்டது. தன் சந்தேகத்தை சோதித்தற்பொருட்டாய் ஒரு பெரிய கத்தியுடன் தன் மனைவிவசிக்கும் வீட்டுப் பக்கத்திலேயுள்ள பற்றை ஒன்றுக்குள் மறைந்து இரவு முழுதும் கண் விழித்துக் கொண்டிருந்தான் தற்செயலாக இரவு நாலு மணிநேரம் அப்பெண் பதினாறு வயதுடைய தன் தம்பியை துணைக்காய் கூட்டிக்கொண்டு அவசிய கருமார்த்தமாய் வெளியே வந்தாள் பற்றை மறைவிலிருந்த சேதாஞ்சியாவுக்கு தன்னிடமுள்ள சந்தேகம் நிவிர்த்தியாய் விட்டது. அவன் கத்தியுடன் வெளியேபாய்ந்து இருவரையும் வெட்டி வீழ்த்தினான். தன் மனையாளோடு வந்தவன் மைத்துனன் என அறிந்தான். மைத்துனன் உடனே மாண்டான் மனைவி ஆபத்தானநிலையில் ஆஸ்பத்திரியில் கிடக்கின்றனளாம். எதிரியும் தான் செய்து கொண்ட கொலையை ஒப்புக்கொண்டானாம்.

## யாழ்ப்பாணம் முற்றவெளியிற் கூடிய மகாசபை.

சென்றவாரம் யாழ்ப்பாணத்தில் மதுபானம் முற்றாக தொலைக்கப்படல் வேண்டுமென மிஸ்ரர் J. K. சண்முகமவர்கள் கீழ்வரும் நிர்ணயத்தைப் பிரேரிக்க ஸ்ரீ சபாரத்தினசிங்மவர்கள் அதனை அனுவதித்தனர். நிர்ணயம் சர்வசனங்கிகாரமாக நிறைவேறியது. நிர்ணயம் வருமாறு:—

மதுபான விசாரணைச் சங்கத்தார் சில நிபந்தனைகளோடு யாழ்ப்பாணத்தில் மதுபானத்தைக் குறைத்துவிடும்படி செய்துள்ள பிரேரணைகள் யாழ்ப்பாண வாசிகளுக்குத் திருப்தியானதல்ல வென்றும் யாழ்ப்பாணத்திலும் தீவுப்பற்றிலும் மதுபானத்தை முற்றாக ஒழித்துவிடல் வேண்டுமென்பதே யாழ்ப்பாணவாசிகளின் நோக்கமென்றும் மருந்து, சமயசம்பந்தமானதேவை, கோடாமுதலிய தொழில்முயற்சிக்கானதேவை என்னும் இந்த மூன்றுக்குந் தவிர வேறு எவ்வகையாகவும் எந்த மதுபானமும் இங்கே உபயோகிக்கப்பட வொண்ணாதென்றும் இந்த மகாசபையார் அரசினருக்கு விண்ணப்பஞ் செய்கிறார்கள் என்பதாம்.

"இந்துசாதனம்"

## முன்னேற்றப் பாட்டு.

மதுரை
பண்டித நா. கிருஷ்ணசாமி நாயுடு எழுதியது.

படிமிசை முந்திய பைந்தமிழ் மாந்தர்கள்!
அடிமை நீங்குமின் அறைவது கேண்மை!
சிறப்பால் அறிவால் செய்கையால் அன்றிப்
பிறப்பால் சாதி பேதமொன் றின்று.
தந்நலங் கருதித் தாங்கள் உயரவே
என்னவோ பலபல இருக்கெசுர் சாமம்
அதர்வண மென்ன ஆக்கினிர் அவற்றுள்
எதனையுஞ் சரியென எற்பதற் கில்லை.
வேதக் கதையை விரிப்போ மானால்
பேதம் அதைவிடப் பேசுதற் கில்லை.
ஒருதாய் வயிற்றில் உதித்த நமக்கு
பெரிதாய் வேற்றுமை பேசி வகுத்தனர்.
வகுத்த பலபல வகுப்பவை தம்மிலும்
மிகத்தவர் தாமென மினுக்கியுங் கொண்டனர்
அவற்றையும நம்பி அறியாது நாமும்
எவற்றுக்கும் மேலாம் இயற்கை இழந்தனம்.
இனந்தான் சாதி இத்தனை யாதற்கு
மனந்தான் காரணம் மற்றொன் றில்லையால்
எதாவ தொன்றை எடுத்தீங் குரிய
உதாரண மாக உரைத்தலுங் கூடும்.
பட்டர் என்னப் படுபவர் நம்மவர்
கட்டிய கோவிலில் காவல் காப்பவர்
ஆதிசைவர் நம் ஆலயம் புகுந்து
வேதிய ராகி விளங்கு கின்றனர்.
பார்ப்பன ரவரைப் பார்ப்பன ரெனவே
ஏர்ப்பா ராயினும் இன்று வரையிலும்
கொள்வன கொடுப்பன கோலங் கண்டிலர்
விள்வன இனிமேல் விவாகமும் அவர்க்குள்.
கடப்பன காலம் கடக்குங் காலை
நடப்பனவாகி நாம் கண்டிடு வோம்
நம்முள் வேற்றுமை நாமொழித் திடலே
தம்முள் வேற்றுமை தாமொழித் திடுவார்.
மெய்ம்மை இவற்றை விளம்புகின்ற மையால்
வைகின்றன ரெமை வாய்கொண்ட மட்டிலும்
பற்பல புகல்வதென் பார்ப்பனர் சில்லோர்
அற்ப னிவனென அருவருக் கின்றனர்.
அறபனும் அறிஞனும் அவரவர் மனத்தொரு
கற்பனை யின்றிக் கண்டதொன் றில்லை.
மறையோன் என்பான் மருவிய உடலும்
பறையோன் என்பான் பருவிய உடலும்
சுடலையிற் கொடுபோய்ச் சுடுமின் தெரியும்
மடமையிற் கிடந்து, மருணடது போதும்.
இனிஇதை விடுமின்! ஏகமாய்க் கூடுமின்!
மனிதப் பிறவியில் மற்றொரு
பேத மின்றெனப் பேணுவம் யாமே!

## விளம்பரம்.

பொதுசன நன்மையை நாடி வெளிவரும் "லோகோபகாரி"ப் பத்திரிகைக்கு 33-வது ஆண்டு நடக்கிறது.

சந்தா விகிதம்.

இந்தியா, பர்மா, இலங்கைக்கு
ஒருவருஷத்திற்கு ரூபா 4—00.
வெளிநாடுகளுக்கு ரூபா 6—00.

லோகோபகாரிப் பத்திரிகாலயம்,
கோமளேசுரன்பேட்டை, சென்னை.

## பெற்றோர்கள் கவனிக்கவேண்டிய விதிகள்.

குழந்தை பிறந்தது முதல் சற்றேறக்குறைய பன்னிரண்டு வயதுவரையில் பாலாரிஷ்டரோகங்கள் முதலியன பிடிக்கும். ஆகையால் குழந்தைகளுக்கு ஆகார வகைகளை முக்கியமாய் கவனித்துவர வேண்டும், மண், சாம்பல், கரி முதலிய வற்றைத்தின்னவிடாமலும், பம்பாய்மிட்டாய் சீனி மிட்டாய் என்று தெருக்களில் கூவித்திரிந்து விற்கும், சிகப்பு பச்சை முதலிய பலவித வர்ணங்களிட்ட சர்க்கரைப்பண்டங்கள், மரிக்கன் மாவினால் செய்த பிஸ்கோத்து, ரோட்டிவகைகள் மிட்டாய் சம்பந்தமான அல்வாக்கள் முதலிய இனிப்பு வஸ்துக்களும், இனிப்புச் சுவை சேர்ந்தபலகார பட்சணங்கள் சேராமலும், காரணமான உரைமருந்துகள் மாந்த எண்ணெய்கள், மாந்த மாத்திரைகள், பேதி மாத்திரைகள் முதலியவற்றை அடுத்தடுத்துக் கொடுத்து சீரணகருவியைக் கெடுக்காமலும், அசீரணபதார்த்தங்கள், பேதியை உண்டாக்கும். மந்தவஸ்துக்கள் மாப்பண்டங்கள் கிழங்குவகைகள் முதலியவைகள் குடல்களில் சூடு உண்டாகி எப்போதும் மலச்சிக்கல், மலக்கட்டு, மலபந்தம், மலவாயு முதலிய மலக்குடல் வாதரோகங்களுக்கு ஆளாக்கி எப்பொழுதும் கஷ்டப்படுத்திவரும் இன்னும் தீரா வியாதியாகிய மலச்சிக்கல் ரோகத்திற்கு மூல காரணமாகயேற்படுவது, அடிக்கடி பேதிக்குக்கொடுக்கும் மிகக்கொடிய கெட்ட வழக்கம் இதனால் தேகத்தையும் மூளையையும சீர்கெடச்செய்வது மன்றி பற்பல வியாதிகளுக்கும், உற்பத்தி ஸ்தானமாய் விளங்கி பலவித தொந்த, வியாதிக்கூட்டங்களை விருத்திசெய்து சந்ததி சந்ததிகளாய் நீங்கமுடியாத கஷ்டநஷ்டத்தோடு மேன்மேலும் வியாதிகளுக்கு ஆளாகாதிருங்கள்.

சுதேச வைத்தியன்.

## தீண்டாமை.

(முற்றொடர்).

முன்னே கூறியபடி மனுஷரின் பிறப்பினால் உயர்வுதாழ்வு இல்லையென்பதை அறிவுடையோர் மறுக்கார். நமது முன்னோர்களாகிய ரிஷிகளில் அநேகர் தாழ்த்தப்பட்ட குலங்களில் பிறந்தவர்களென்பதும் அவ்விதமிருந்தும் அவர்களே தலைசிறந்து எல்லார்க்கும் சமயாசாரியர்களாய்ப் பெருமைவாய்ந்து விளங்கினர்களென்பதும் நாமறிந்த விஷயமே. மேலும் தற்போது தம்மை உயர் குலத்தோரென்று கூறிக்கொள்ளுபவர்களில் பலர் மேற்கூறிய ரிஷிகளின் கோத்திரத்தின் வழித்தோன்றியவர்களா யிருப்பது மீங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நிற்க நம்மிற் சிலர் தாழ்த்தப்பட்டவரென்போர் மது மாமிசங்களைப் புசிக்கின்றார்களாதலின் அவர்களைத் தாழ்வாகக் கருதவேண்டியிருக்கிறதென நியாயங் கூறுகின்றார்கள். இதை ஆலோசிக்குமிடத்து ஏறக்குறைய நம்மில் எல்லாச்சாதியார்களிலும் மதுமாமிசங்களை யுட்கொள்ளுபவர்கள் பலரிருக்கக் காணலாம். அவர்களை உயர்சாதியார்கள் புறம்பாய் நீக்கி வைத்திருக்கிறார்களா? அல்லது அவர்களை அவமதிக்கிறார்களா? இல்லை. ஆதலின் அவ்விதம் புசிப்பவர்களுக்கு எடுத்துச் சொல்லித் திருத்தவேண்டுமேயொழிய அவர்களைத் தனியே பிரித்து இழிவுபடுத்திச் சனசமூகத்தைப் பிளவுபடுத்துவது அறிவுடையோரெனக் குறிக்கும் உயர்சாதியினருக் கழகா என்பதை உற்றுநோக்குங்கள். ஆதலின் இத்தகைய விஷயங்களைக் கவனித்து தேசநன்மைக்காய்ப் பாடுபடும் ஒவ்வொருவரும் இயற்கையில் இறைவனாற் பிரிக்கப்படாத வீணான சாதி வேற்றுமைகளை அறவே கைநெகிழவிட்டு உடன் பிறந்தோர் யாவரும் ஒன்றுபட்டுத் தாழ்த்தப்பட்டவர்களென்பவர்களை முன்னுக்குக் கொண்டுவந்து அவர்களுக்குத் தக்க சகாயமும் மரியாதை மதிப்புங் கொடுத்து சமூகநலத்தையும் சமய வளர்ச்சியையும் தேச முன்னேற்றத்தையும் சாதிக்கவேண்டுவது இன்றியமையாத உங்கள் கடமையாகும்.

இன்னும் நம் தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்கெனச் சில குறிக்க விரும்புகிறோம். தாழ்த்தப்பட்ட நேயர்களே! நீங்கள் இவ்வளவு தாழ்மையடைந்ததற்கு காரணம் உயர்வகுப்பாளர்களேயென்று குற்றம் யாவற்றையும் மற்றவர்மீது சுமத்தி நீங்கள் பரிசுத்தமானவர்களென்று எண்ணிவிடுதல் கூடாது. நீங்கள் சீழ்மையடைந்ததற்குக் காரணம் உங்களிடத்திலே முக்காற்பங்கு குற்றமுள்ளதென்பதையுன்னிப்பார்க்கவேண்டும். அதாவது உங்களிடத்திலுள்ள ஆசாரமின்மை, ஒழுங்கின்மை, பரிசுத்தமின்மை, செல்வமின்மை, ஆத்மகௌரவமின்மை, மனத்தின் தைரியமின்மை முதலிய பலகுற்றங்களும் காரணமாம் ஆகையால் நீங்கள் தினந்தோறும் குளித்துப் பரிசுத்தர்களா யிருக்கவேண்டும்; அழுக்கற்ற ஆடைகளை அணியவேண்டும்; நல்ல ஆசாரங்களைக் கைப்பற்றி பொழுகவேண்டும்; வீடுவாசல்களை நன்கமைத்து மெழுகி கோலமிட்டு அழகுறச் செய்யவேண்டும்; கல்வியைக் கற்று அறிவை விசாலமாக்கிக்கொள்ளவேண்டும்; கொச்சையின்றிச் செவ்வையாக வார்த்தைகளைப் பேசப் பழகவேண்டும்; மது மாமிசங்களை உண்ணாதிருக்கவேண்டும்; மூடநம்பிக்கைகளை மேற்கொண்டு ஸ்திரிபுருஷர்கள் அநாகரிகமாய் ஆடையாபரணாதிகளை யணிவதை விட்டு, திருத்தமுற நாகரிகமாய் ஆடையாபரணாதிகளை யணியப் பழகவேண்டும். லாபகரமான நல்ல கைத்தொழில்களைச் செய்து ஊதியத்தைப் பெருக்கிக்கொள்ளவேண்டும். சமயாபிமானங்கொண்டு தூயவழியில் கடவுளை வழிபடவேண்டும். இந்துசனசமுகத்தினராகிய பிறவகுப்பாருக் குரிமையானதுபோல் தமக்கும் சம சுதந்தர முண்டென்னும் தன்மதிப்பை அறியவேண்டும். பொதுவில் நீதி ஒழுங்கு இவற்றில் தவறாது நடக்கவும் முயல வேண்டுவது அவசியமாகும். இவ்விதம் நீங்கள் நடக்கத் தலைப்படுவீர்களேயாயின் முன்னேற்றம் விரைவில் சாதிக்கப் பெறுவது நிச்சயம். இன்னும் இந்துசமயத்திலுள்ள தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் கௌரவத்தைக் கருதி கிறீஸ்து முதலிய அன்னிய மதங்களைத் தழுவுவதென்பது வெறுக்கத்தக்க விஷயமாம். இந்துசமயமென்பது எவ்வளவோ உயர்ந்ததென்றும், உலகத்துள்ள பல சமயங்களின் உண்மைகளை ஒருங்கே தன்னகத்தில் கொண்டதென்றும் நம் முன்னோர்கள் புகழ்ந்து பன்முறை கூறியிருக்கின்றனர். அவ்விதமிருக்க சமயப்பற்றும் ஆத்ம கௌரவமுமின்றி சில தினங்களுக்குமுன் கோண்டாவில் என்னுமூரில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பாளரில் சிலர், கிறீஸ்துமதத்தில் சேர்ந்துவிட்டார்களென்ற போலிக்கதை யொன்றுண்டு. கேவலம் கௌரவத்தைக் கருதி பிறமதக்களைக் கைப்பற்றுதல் கூடாது. இருந்த மதத்தி லிருந்து கௌரவமடைய முயலுதலே ஆண்மையுடமையாம்.

திராவிட நண்பன்

முதலாம் பக்கத் தொடர்ச்சி.

வெந்து கருகிச் சுளித்து ஒடுங்கியதாய்க் காணவேண்டிய சந்தர்ப்பம் விரைவில் வந்து நேர்ந்துவிடும் அப்பொழுது நமது அறியாமைக்கு இரங்கவேண்டிவரும்.

* * *

ஒருத்தி தனக்குக் கிடைக்காதவரையில் அரம்பை ஊர்வசி ரதியென அவளைப்பற்றிக் கனவு காண்கின்றான்; அவள் தனக்கு மனைவியாகவாய்த்துவிட்டாலோ அவளின் அழகு இவனுக்குப் பிரியப் படுவதில்லை. அவளைக் குரூபியெனவே கருதி அன்னிய ஸ்திரீயை அழகியென நினைக்கிறான். இதுவும் உலகசுபாவம்.

* * *

ஒருவர் தனக்கு வந்த கடிதத்திற்குப் பத்துநாட்களோ பதினைந்து நாட்களோ கழித்துப் பதிலெழுதப்படுகிறது. அப்படி எழுதினவுடனே தன் கடிதத்திற்கு மறுநாளே பதில் வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறார். இரண்டு மூன்று தினங்கள் எதிர்பார்த்தும் பதில் வாராமைகண்டு வருந்திக் கோபித்து உடனே பதில் எழுதவில்லை, சோம்பேறி என்று நிந்திக்க ஆரம்பித்துவிடுகிறார். அவ்வேளை தன் செய்கை அவருக்கு ஞாபகத்திற்கு வருவதே கிடையாது.

* * *

பல நண்பர்கள் அகஸ்மாத்தாய் ஓரிடத்தில் ஒன்றுகூடும்போது போட்டோபடம் எடுத்துவிடுகின்றனர். போட்டோ எடுத்த பின்னால் மற்றொருமுறை அவ்வாறு எல்லா நண்பர்களும் கூடுமொருசமையம் வாய்க்குமென்று வாழ்நாட்களில் எதிர்பார்த்தல் முடியாதகாரியம். பலரும் பலதிசைக்குச் சென்று விடுகின்றனர். இதனிடையில் யமன்வாய்ப்பட்டு மறைபவரும் பலர்.

* * *

ஒருவன் தன்னைவிட உயர்ந்த சாதியார் என்றவகுப்பினர்களோடு கலந்துகொள்ள வேண்டும் என்ற விஷயத்தில் தீவிரமாக முனைந்து முன்வந்து நிற்கிறான்; அவனை தன்னைவிடத் தாழ்த்தப்பட்ட சாதியானைத் தன்னுடன் கலந்துகொள்ளப் பின்னடைகிறான். அதுவிஷயத்தை எடுத்துரைப்பவரது வார்த்தையைக் கேளாது ஒதுங்கிச் செல்லுகின்றான். முன்னாலிருந்த அறிவு பின்னால் மழுங்கிவிடுகிறது. கொள் என்றால் வாயைத் திறப்பதும் கடிவாளமென்றால் வாயை மூடுவதும் குதிரையின் வழக்கம். அதனை மனிதரும் கையாடுவது எதற்கோ.

## மாதர்களின் ஒழுக்கத்தைப்பற்றி கதாநிதி பத்மாவதிக்குக் கூறுதல்.

### தொகுதி.

(முற்றொடர்)

எனது புருஷனின் தம்பி தமையன் முதலிய சுற்றத்தாரும் மற்ற இனத்தாரும் நன்மைகொண்டாடத்தக்கதாயிருப்பேன்; அவர்களைத் தாட்சியில்லாது விசாரிப்பேன்; முன் நகைத்துப் பின் புறணி கூறேன்; கோட்சொல்லிக் கலகம் விளைக்கேன்; பெற்றாருக்கும் பிறந்தாருக்கும் பிணக்கை யுண்டாக்கேன்; பொறாமைப்படேன்; பொய் பேசேன்; வீணாசை கொள்ளேன்; வீட்டடமைகளை ஒருவருக்கும் வீணிற் கொடேன்; சொல்லுவார் பேச்சைக் கேட்டு மல்லுக்குப் போகேன்; இவையன்றியும், என் கணவர் விடு விட்டு வேலை நிமித்தம் வேறூருக்குப் போயிருந்தால், அவர் வருகிற பரியந்தம் சந்தன புஷ்ப பரிமளாதிகளை விரும்பேன்; மஞ்சள் குங்குமம் தாம்பூலாதிகளைப் பொருந்தேன்; தலை சீவிக் கொண்டையிட்டுக் கொள்ளமாட்டேன்; பூஷணலங்கிர்தம் பொருந்தேன்; நல்ல வஸ்திர முடுக்கேன்; ஊருக்குப் போயிருந்த என் கணவர் வந்த பிறகு இத்தியாதி அலங்காரத்துடன் எதிர் நின்று, அவர் கண்டு களிக்கக் கலந்து இன்பம் பெறுவேன்; உள்ளூரில் வெளியே போயிருந்து வீட்டுக்கு வரும் என் காதலனைக் காணுமளவும், நான் முந்திச் சாப்பிடமாட்டேன்; இன்னும் அன்னத்தை இலையிற் படைத்துவிட்டு உப்பில்லை-ஊறுகாயில்லை - மிளகில்லை - மிளகாயில்லை - புளியில்லை - பூண்டில்லை - அரிசி கட்டை வறட்டி ஒன்றுமில்லையென முன்னின்று பிடாரி பிடிக்கின்றாப்போற் பேசமாட்டேன். ஆண்பிள்ளையானுடைய சம்பாத்தியத்திற்குத்தக்க செலவு தகுந்தபடி செய்வேன். தாய் வீட்டிற் பக்ஷம் வைத்து அடிக்கடி தாய்மனைக் கேகேன். (வாழ் மனைப்பண்டந் தாய்மனைக் கேகில் தாய் மனை பாழ்மனையாகும்) என்ற வாக்கியமறிவேன். நாயகன்மேல் நாட்டிய கண்ணை மற்றொருவர்மேல் நாட்டேன். வீட்டுப் பிரத்தியேகம் வந்தால் ஒருவேளை அன்னம் உண்டுகொண்டிருப்பேன். மூன்றாம் நாள் ஸ்நானம்பண்ணிப் புறம்பிலிருந்து நான்காம்நாள் நதியில் ஸ்நானம்பண்ணி, ஐந்தாம்நாள் எண்ணெயிட்டு மூழ்கி வீட்டைக் கோசல கோமயத்தாற் சுத்தி பண்ணி, அப்பாற் புருடன் முகத்தில் விழிப்பேன்; அவருடன் பேசுவேன். மாதருதுவான நான்குநாளும் மகிழ்நன் முகத்தில் விழித்தாலும் பேசினாலும் மங்கிலியத்திற்குக் குறைவு வரும். ஒருவர் முகத்திலும் விழிக்காது நாயகன் முகத்தில் விழித்தால் ஆயுசு விர்த்தியும் ஐசுவரியமும் உண்டாம். அருமருந்தன்ன பிள்ளைகளையும் பெற்றுக்கொள்ளலாம். ஒருவேளை நாயகன் ஊரிலில்லாவிட்டால் புருடன் ரூபத்தை மனதில் நினைத்து நாட்டி சூரியனைக் குறித்துத் தரிசிக்கவேண்டும். முழுமதியோடுங் கற்புடமையாகிய பொக்கிஷத்தைக் காப்பேன். பதிவிரதாபூஷணமிருந்தால் திரிமூர்த்திகளும் மதித்துத் துதிப்பார்கள்.

ஓ பத்மாவதியே! புருடன் தன்னுடைய சம்பாத்தியத்தைப் பெண்சாதியிடத்திற் கொடுத்து இருவருங் கலந்து ஒரு மனதாய்ப் பொருந்தி சமுகவிசார நடத்தி வரும்போது, அந்த ஸ்திரீயானவள் இப்பேர்ப்பட்ட கணவனைத் தெய்வமென்றெண்ணாமல் வஞ்சிக்கலாகாது. மாதா-பிதா-குரு-தெய்வம் என்று சொல்லப்பட்ட பிரபஞ்சவாழ்க்கையெல்லாம் புருஷனே. ஈஸ்வரன் பேதமையாகிய பெணகளைச் சிருட்டித்தற்குக் காரணமென்னவெனில் மணவாளராகிய கணவருக்குப் பணிவிடை செய்யவும், லோக விருத்திக்குச் சந்ததி உற்பத்தியாகவு மேற்படுத்தியது. பின் எந்தவேளையுங் காமக் கலவியும் ஆபரண வஸ்திர அலங்காரங்களும் மேனி மினுக்குதலும் பண்ணிக்கொண்டு தாம்பூலந் தரித்து விண்ணணம் பேசி வேடிக்கையா யிருப்பதற்கு ஏற்படுத்தியதில்லை. இரவிற் சரசமாயிருந்ததை நினைத்து இறுமாப்படைந்து மரியாதை தப்பி இன்பரசத்தைப் போக்கடித்துக் கொள்ளலாகாது. சொப்பனத்திலுங் காமத்தைக் கருதக்கூடாது. அப்படிக்கில்லாது அறத்தின்வழி நில்லாமல், நாயகனை மதியாமல், நால்வரும் நகைப்பாரென் றெண்ணாமல், மனதைப் போன வழி விட்டு, மகிழ்நனை வஞ்சித்து, மனக்காவல் - முன்தானைக்காவல் இவைகளை மறந்து, கல்லவள்போ லிருந்து, நடைநொடி பாவனை புரிந்து, இரகசியத்திற் சோரத்துவம் பண்ணுவாளாகில் மகா கொடிய பாவியாவாள். துட்டநடத்தையுள்ள கெட்டவளாவாள். பகலை யிருளென்ற பழிகாரியாவள். அவளிருக்கும் வீடு யாளி யிருக்குங் காடு. (வரும்)

## வியாபார நீதி.

வியாபாரிகாள்!

உலகத்திலே 'வியாபாரம்' எத்தொழிலைக்காட்டிலும் மிகவுஞ் சிறந்த தொழில். வியாபாரத்தினாலேயே மேனாட்டு ஆங்கிலேயர் எத்தனையோ கோடிக்கணக்கையுடைய சனங்க ளடங்கிய எத்தனையோ தேசங்களை ஆட்சிபுரிந்துவருகிறார்களென்பதை நாம் அதிகமாக எடுத்துரைக்கத் தேவையில்லை. இருந்தும் வியாபாரத்தின் சிறப்பை விரிக்கிற் பெருகுமென றஞ்சி விடுத்தனம்.

### 2. வியாபாரத்தின் ஒழுக்கம்.

வியாபாரிகள் நன்னடை, நாணயப்பொறுப்பு, நல்ல அபிமானம், சனங்களிடத்தன்பு, இனிய வசனம், தன்னைப்போற் பிறரையும் மதித்தல், உலகானுபவம் முதலியவற்றி லீடுபட் டொழுகல்வேண்டும்.

### 3. வியாபாரப் பழக்கம்.

வியாபாரஞ்செய்வதற்குத் தேவையான மட்டும் புத்தி வேண்டும். புத்தியில்லா வியாபாரம் விழலுக்குச் சமானம் என்று காலங்கண்ட பெரியோ ருரைத்திருக்கின்றனர். வியாபாரஞ் செய்ய விரும்புமுன்னர், பன்னெடுங்காலமாய் வியாபாரத்திற் பழகி யனுபோகமுள்ள பிரபல வர்த்தக சிகாமணிகளிடத்தி லமர்ந்து வியாபார முறைகளைச் செவ்வனே யுணரவேண்டும்.

### 4. வியாபாரிகளின் ஒற்றுமை.

வியாபாரிகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு தொழில் புரிவதால் தங்கள் பொருளே விரையமாகுமன்றி வியாபாரத்தில் ஆதாயமில்லாமற் போகவும் வேண்டும். ஆகவே வியாபாரிகள் ஒற்றுமையென்னும் அணிகலத்தை ஒவ்வொருவரும் அணிதல்வேண்டும்.

### 5. வியாபாரத்தின் கடன்.

சில வியாபாரிகள் கடன்படாது தமது கைப்பணங்கொண்டு வியாபாரஞ் செய்பவர்களுமுண்டு அவர்களின் தன்மைகளைப்பற்றி நாம் இங்கு கூறவேண்டிய ஆவசியமில்லை. எனில் சில வியாபாரிகள் தங்கள் தங்கள் வியாபாரத்தினிமித்தமாக ஏராளமாகக் கடன் வாங்குவதுண்டு. அவர்கள் சொல்லுறுதி வழுவாது நடந்துகொள்ளல்வேண்டும். கடன் கொடுத்தவர் வந்து கேட்கும்வேளை முகத்தைச் சுழித்துரைப்பதும் அவர்களுடன் சினங்கொண்டு பேசுவதும் வியாபாரிகளுக்கேற்ற ஒழுங்கல்ல. வியாபாரிகளே! கடன் தந்தவர்கள் வந்து பணத்தைக் கேட்கும்போது நாம் அவர்களுடன் நல்ல வார்த்தையாடி பணங் கொடுக்கவேண்டியது தானேயென் றெண்ணி அவர்களுடன் இனிய மொழி பேசாமல் முகத்தைக் கடுகடுத்துப் பேசுவோர் மனிதராக இருப்பினும் ஒழுக்கத்திற்கு மாறுபட்டவராகவே கருதப்படுவார்.

### 6. வியாபாரி விதி.

வியாபாரஞ் செய்யுமிடம் நல்லவர், பொல்லாதார், குடியர், வெறியர், குலமாது, விலைமாது, சிறுவர், சிறுமியர் முதல் யாவரும் வருவதற்கேற்ற இடம். அவரவர்களுக்குத் தகுந்தபடி மரியாதையோடு நடந்துகொள்ளல்வேண்டும். பேசும் வார்த்தையிற் கள்ளங் கபடின்றியும் பேசுதல்வேண்டும். தன் கைமுதலுக்கு மோசம் வராதபடி வியாபாரஞ் செய்தல் வேண்டும். பலரும் வந்து கடன் கேட்பார்கள். அப்பொழுது நிதானித்துத் தான் தப்பும் முறையாய் நடந்துகொள்ளல்வேண்டும். இன்னும் வியாபாரத்திற்கு வரும் சனங்களை ஏமாற்றிவிடக்கூடாது. அளவு நிறைகளைக் குறைத்துவிடப்படாது. விலை நிதானங்களும் சமமாயிருத்தல்வேண்டும். நல்ல புதிய சரக்குகளை வைத்து வியாபாரஞ் செய்தல் மிகவும் நயத்தைத் தரும்.

### 7. ஓர் எல்லை.

வியாபாரிகட்கு ஓர் எல்லை கணக்கு அவசியம் வேண்டும். ஏனெனில், ஆசைக்கோரளவேயில்லை என்பதற்கமைய மனம் பலமலையாய் எண்ணிக் குவித்துவிடும். இதனாற் சில வியாபாரிகள் அளவுக்கு மிஞ்சிய பேராசைகொண்டு இத்தொழில் புரிவதனால் இலாபங்கிடைக்குமா? அல்லது அவன் அத்தொழிலை நடாத்திப் பெரும் பணக்காரனாய் விட்டானே! அந்தத்தொழிலை நாமும் நடத்தலாமா? எனப் பேராசை கொண்டு வியாபாரஞ் செய்வதால், அதிக ஆசை முதலுக்கே மோசம் என்பதற்கிணங்க, நம்கையிலிருந்த பொருள்களும் போய்விடும் ஆதலின் தம் கைப்பொருளுக்குத் தக்கபடியும் தன் சாமார்த்திய திறமையைப் பொறுத்தும் இத்தொழிலைக் குறைவின்றி நடத்தலாமென உறுதிகொண்டு நடத்தவேண்டும்.

### 8. உலக அனுபவ முறை.

உலக வர்த்தமானங்களைத் தெரிந்து கொள்வதினால் நயமும் லாபமும் உண்டு. அதெப்படியெனில் உலக வர்த்தமானங்களை யெழுதிவரும் பல பத்திரிகைகளையும் படித்தறிதல் வேண்டும்.

### 9. வியாபாரத்தின் பெருமை.

சில வியாபாரிகளுக்குத் தன் பொருள் பிறர்பொருள் என்பன அறியாது பல வியாபாரிகளிடத்தும் கடன் வாங்கிக்கொண்டு வீடு கட்டுவதும் காணி கொள்ளுவதும் வண்டி, குதிரை, மாடு இவைகளில் பணத்தைப் போடுதலும், தனக்கெனத் தாரமிருக்கவும் தாசியை நேசிப்பதும், பிறருக்குத் தாம் கடன் கொடுப்பதும் போன்ற பெருமையை வகித்து மகிழ்வடைகின்றார்கள். உலகானுபவப்படியே "மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை" என்பதுபோல் மதிப்புவந்தகாலத்துச் சிரமந் தெரியாது, வரவு செலவுந் தெரியாது, மதிப்பிற்குத் தகுந்த சிரமம் ஏற்படும்; பின் பெருமைக்குரிய சிரமமு மேற்படுமென்பதை எண்ணி அநீதியின்றி நடந்துகொள்ளல்வேண்டும்.

### 10. கேட்டுக்குரியவை நினைத்தல்.

சில வியாபாரிகள் சிற்சில வியாபாரிகளுக்குக் கேடு வரும்படி நினைப்பார்கள். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பதற்கிணங்க, தான் கெடவேண்டி பிறன்மேற் பொறாமைகொண்டு பிறருக்குத் தீங்கெண்ணுதல் நன்றல்ல. இங்ஙனம் பிறருக்குத் தோண்டிய குழி தனக்கேயானாலு மாகுமன்றோ? ஆதலால், வியாபாரிகளே, ஒருவனுக்குக் கேடு நினைத்தலே கூடாதென்பதை நாம் ஆவசியகம் கண்டுணர்தல் வேண்டும்.

## மகாத்மா காந்தி சரித்திரம்.

(முற்றொடர்)

### "நகைக் கதை."

'நவசீவன்' பத்திரிகையில் மகாத்மாகாந்தி தமது இல்லறவாழ்க்கையில் நேர்ந்த ஒரு சாரமான சம்பவத்தை எடுத்துரைத்திருக்கின்றார்:-

யுத்தத்தில் எனக்கு ஏற்பட்டிருந்த கடமைகள் தீர்ந்ததும் நான் இந்தியாவிற்குத் திரும்பிச் செல்லவிரும்பினேன். இந்தியாவிலுள்ள எனது நண்பர்கள், இந்தியாவிற்குத் திரும்பிவரும்படி என்னைப் பன்முறையும் வேண்டிக் கொண்டுவந்தனர். இந்தியாவிற்குத்திரும்பி வந்தால் நான் எனது தாய் நாட்டிற்கு இன்னும் அதிகமான சேவை செய்யக் கூடுமென்று எனக்குத் தோன்றியது எனது தோழர்களை எனக்கு விடை கொடுக்கும்படி கேட்டேன். அவர்களை ஒரு நிபந்தனைக்குட்பட்டு எனக்கு விடை கொடுக்கும்படி செய்வதற்கே நான் மிகுந்தபாடுபட வேண்டியிருந்தது. ஒரு வருஷத்திற்குள் என் உதவிவேண்டுமென்று தோன்றித் தாங்கள் அழைத்தால் நான் தென்னாப்பிரிக்காவிற்குக் கட்டாயம் திரும்பி வந்துதீரவேண்டுமென்று அவர்கள் ஒரு நிபந்தனையை ஏற்படுத்தினர். அவ்வாறு செய்வதாக அவர்கள் விருப்பப்படி பிரமாணஞ் செய்து கொடுத்துத் தாய் நாடு திரும்ப விடைபெற்றேன். அப்பொழுது நெட்டால் இந்தியர்களுடன் தான் எனக்கு நெருங்கிய சம்பந்தமிருந்துவந்தது. அவர்கள் தங்களுடைய அன்னியோன்ய நட்பிற்கறிகுறியாக எனக்கு எங்கும் உபசாரப்பத்திரங்களைப் படித்துக் கொடுத்து விலையுயர்ந்த வெகுமதிகளையும் கொடுத்தனர். எனக்கு வெகுமதியாகத் தங்க வெள்ளிச்சாமான்களும் நகைகளும் கொடுக்கப்பட்டன. இந்தவெகுமதிகளால் எனது மனச்சாட்சிக்கு மிகுந்த சங்கடம் ஏற்பட ஆரம்பித்தது நான் அவற்றை ஏற்றுக்கொள்ளலாமா கூடாதா என்ற கேள்வி என்மனத்தைவருத்தியது. எனது கட்சிக்காரர்கள் கொடுத்த சில வெகுமானங்களைத்தவிர மற்றவை எல்லாம் எனது பொதுசன ஊழியத்தைப் பாராட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டிருந்தன. இந்த வெகுமதிகளுள் $52\frac{1}{2}$ பவுண் மதிப்புள்ள மாலை ஒன்றும் இருந்தது அது என்மனைவியினால் உபயோகிக்கப்படவேண்டுமென்ற நோக்கத்துடன் கொடுக்கப்பட்டது. ஒருநாள் இரவெல்லாம் இவ்விஷயமே எனது மனத்தை அலைத்து வந்ததால் எனக்குத் தூக்கம் வரவில்லை நான் இந்த கஷ்டமான விஷயத்தைத் தீர்க்க எவ்வளவுமுயற்சி செய்தபோதிலும் இதற்கான வழியைக்கண்டு பிடிக்கமுடியவில்லை. நூற்றுக்கணக்கான பேர் வெகுமதிகள் கொடுத்திருந்தனர் ஆதலால் அவரவர்களுக்கு அவரவர்கள் கொடுத்ததைத் திருப்பிக் கொடுப்பதும் சாத்தியமானகாரியமில்லை மேலும் அவற்றை என்னுடன் வைத்துக்கொண்டிருப்பது அதைவிட இன்னும் கஷ்டமானகாரியமாக இருந்தது. நகைப்பயித்தியத்தை விடும்படி மற்றவர்களுக்கு நான் உபதேசஞ் செய்துவந்திருக்கிறேன். இப்படியிருக்கையில், இந்த நகைகளையும் விலை உயர்ந்தவைரம் முதலிய கற்களையும் நான் தற்பொழுது வைத்துக்கொண்டு என்ன செய்வது? நான் அவற்றைவைத்துக்கொள்ளக் கூடாதென்று தீர்மானித்தேன். நான் இந்த நகைகளுக்கு ஸ்ரீமான் ரஸ்டம்ஜீ போன்ற சிலரை டிரஸ்டியாக நியமிக்கத்தீர்மானித்து அவர்களுக்கு அனுப்புவதற்காக ஒரு கடிதம் எழுதிவைத்திருந்தேன். நான் எனது மனைவியைக்கலந்து பேசி மறுநாட்காலை முதல் இந்தத் தொல்லையி லிருந்து விடுபெறத் தீர்மானித்தேன். என் அபிப்பிராயத்திற் கிணங்கும்படி எனது மனைவியைச் செய்வது கஷ்டமானகாரியமாகுமென்பது எனக்குத்தெரியும் என் குழந்தைகளுக்கு எனதுகருத்தை எடுத்து விளக்குவதில் கஷ்டமிராதென்று எனக்கு நிச்சயமாகத்தெரிந்தது, நான் எனது குழந்தைகளை எனக்காக அவர்களது தாயாரிடம்பரிந்து வாதாடும்படி கேட்கத் தீர்மானித்தேன் அவர்கள் எனது மனோ நிலைமையைச் சீக்கிரம் உணர்ந்து விட்டனர். அவர்கள் தங்களுக்கு இந்த நகைகள் வேண்டாமென்று தங்களுக்கு நகை வேண்டியிருந்தால் தாங்களாகவே வாங்கிக் கொள்ளமுடியும் என்றும் கூறினர் அதனை அவர்களது தாயாருக்கு எடுத்து விளக்கும்படி அவர்களைக் கேட்டேன். ஆனால் அவ்வேலை அவர்கள் எதிர்பார்த்ததைவிட மிகக்கஷ்டமாய்ப் போய்விட்டது.

எனது மனைவி கஸ்தூரிபாய் என்னிடம் வந்து பின்வருமாறு சரமாரியாக வார்த்தைகளைப் பொழியலானாள்:—

"தாங்களுக்கு இவைவேண்டாமலிருக்கலாம் அவைதங்கள் குழந்தைகளுக்கு உபயோகப்படாமலிருக்கலாம் குழந்தைகள் தாங்கள் சொல்லுவதைக் கேட்டுக் கூத்தாடுகின்றனர் சரி கிடக் கட்டும் தாங்கள் என்னை நகையணியவிடுவதில்லை. எல்லாம் தங்கள் இஷ்டப்படியே செய்து கொள்ளுங்கள் இது போகட்டும். என்னுடைய நாட்டுப் பெண்களைப்பற்றி என்ன சொல்லுகின்றீர்கள்? அவர்களாவது இவற்றை உபயோகிக்கலாம். நாளை நமக்கு என்ன நேரப்போகிறதென்பது யாருக்குத்தெரியும்? ஆதலால் ஒருமுறை கொடுத்ததைத் திருப்பிக் கொடுக்க முடியாது?

இவ்வாறு சரமாரியாகப் பொழிந்துவிட்டு அவள் கலகல வென்று கண்ணீர் உகுக்கலானாள், குழந்தைகளும் பிடிவாதமாக இருந்தனர். நானும் இவற்றை எல்லாம் கண்டு மனஞ் சலிப்பதில்லை என்று தீர்மானித்துக் கொண்டு மெதுவாகப் பின்வருமாறு சொல்லலானேன் "பையன்கள் கட்டாயம் மணஞ்செய்து கொள்ளலாம். அவர்களுக்குப் பால்யத்தில் விவாகம் செய்வதென்று நாம் எப்பொழுது விரும்பியிருக்கின்றோம்? அவர்கள் தக்க வயதுவந்ததும் அவர்கள் இஷ்டப்படியே நடந்துகொள்ளலாம். மேலும் நகைப்பயித்தியம் பிடித்த பெண்களை நாம் மருமக்களாகக் கொள்ளப்போவதுமில்லை, இப்படி எல்லாம் இருந்தபோதிலும் ஆபரணங்கள் வேண்டி இருந்தால் அவற்றை வாங்கிக் கொடுக்க நான் இல்லையா?

இதுகேட்ட என் மனைவி கஸ்தூரிபாய் பின்வருமாறு மொழியலானாள்:—

எனக்குத்தான் தங்களைப்பற்றி நன்கு தெரியுமே. எனது நகைகளை என்னிடமிருந்து பறித்தவர் தாங்களல்லவா? ஆபரணங்களை அணிந்து சந்தோஷமாக இருக்க என்னை விடாத தாங்களா என் மருமக்களுக்கு ஏதேனும் நகை வாங்கிக் கொடுக்கப்போகின்றீர்கள்? தாங்கள் இப்பொழுதே பையன்களைச் சந்நியாசிகளாக்கப் பார்க்க விரும்புகிறீர்கள். இந்த நகைகளைத் திருப்பிக்கொடுக்க முடியாது. என் கழுத்துச்சங்கிலி விஷயத்தில் தங்களுக்கு என்ன உரிமை இருக்கின்றது?

நான்:—இந்தக் கழுத்துச் சங்கிலி நான் செய்த சேவைக்கு வெகுமானமாகக் கிடைத்ததா? அன்றி உன்னுடைய சேவைக்கு வெகுமானமாகக் கிடைத்ததா? என்று நான் கேட்டேன்.

கஸ்தூரிபாய்:—தங்களுடைய சேவைக்காகவே அவை வெகுமானங்களாகக் கிடைத்திருக்கலாம் ஆனால் தங்களது ஊழியம் எனது ஊழியத்திற்கு ஒப்பானதுதான். நெற்றிவியர்வை நிலத்திற் சொட்டும்படி இராப்பகலாக என்னை வேலைசெய்ய வைக்கும்பொழுது தாங்கள் அதனை எனது சேவையாகக் கணக்கிடுவதில்லையா? தாங்கள் கண்டவர்களையெல்லாம் வீட்டுக்கு அழைத்துவருகின்றீர்கள். அவர்களுக்கெல்லாம் நான் அடிமைமாதிரி உழைக்க வேண்டி யிருக்கின்றது. என்சேவையின் பயனென்ன?

என் மனைவி இவ்வாறு விடுத்த சொல்லம்புகளில் சில என்மனதிற் பதிந்தன ஆனால் நான் எப்படியும் நகைகளைத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருந்தது நான் எப்படியோ என் மனைவியின் சம்மதத்தைப் பன்முறையும் வாங்கியிருக்கின்றேன்.

இம்முறையும் அவள் சம்மதத்தைப் பெற்று நான் 1896-1901 ம் வருஷங்களில் எனக்குக் கிடைத்த வெகுமதிகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டேன். அவை ஒரு பாங்கில் டிரஸ்டிகளின் பார்வையில் வைக்கப்பட்டன. அவை எனது விருப்பத்திற் கிணங்கவாவது அன்றி டிரஸ்டிகளின் விருப்பத்திற் கிணங்கவாவது செலவிடப்பட வேண்டுமென்று ஒரு நிபந்தனையும் ஏற்படுத்தப்பட்டது.

இந்த ஆபரணங்களை விற்காமல் பாதுகாப்பதற்காகப் பலமுறை நிதிசேர்த்திருக்கின்றேன். இன்று கூட அவை அவசரச் சமையங்களில் உபயோகப்படும்படி மூலதனமாக வைக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி செய்ததற்காக நான் பின்னர் வருந்த வேண்டியது ஏற்படவில்லை. கஸ்தூரிபாயும் சிறிது காலஞ்சென்ற பிறகு இந்தச் செயலின் முக்கியத்தை உணர்ந்தாள். பல முறை நாங்கள் ஆசைகளுக்கு ஆளாகாமல் தப்பிவந்திருக்கின்றோம். பொதுசன ஊழியர்கள் வெகுமானங்களை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்ற முடிவிற்கு நான் வந்திருக்கின்றேன்.

---

Published by P. A. Krishnan for and on behalf of the Jaffna depressed classes Association Chunnakam published at the Saiva Pragasa Press, Vannarponnai, Jaffna.